BSNL ஊழியர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தோழர்களே! தோழியர்களே!!

BSNL நிறுவனத்தில் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்காக நடைபெறும் 7வது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் 10-05-2016 அன்று நடைபெற உள்ளது. நடந்து முடிந்த ஆறு சங்க அங்கீகார தேர்தல்களில் 2 ஆவது தேர்தல் முதல் தொடர்ச்சியாக ஐந்து முறை BSNL ஊழியர் சங்கம் வெற்றி பெற்று வந்துள்ளது. முதல் சங்க அங்கீகார தேர்தலில் வெற்றி பெற்ற NFTE சங்கத்திற்கு அதற்கு பின் முதன்மை சங்கமாக வரவே இயலவில்லை. அதிலும் குறிப்பாக 4ஆவது சங்க அங்கீகார தேர்தலில் NFTE மற்றும் FNTO சங்கங்கள் கூட்டணியாக இருந்த போதும் கூட அவர்களால் BSNL ஊழியர் சங்கத்தினை வெற்றி கொள்ள முடியவில்லை.

இதுவரை நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும், BSNL ஊழியர் சங்கம் தனது வாக்கு சதவிகிதத்தை அதிகரித்துக் கொண்டே செல்வதற்கும், ஆகப்பெரிய சங்கம் என்றிருந்த NFTE சங்கம் தேய்பிறையாய் தேய்ந்து கொண்டே செல்வதற்கும் என்ன காரணம்? BSNL ஊழியர் சங்கத்தை பொருத்தவரை, ஊழியர்களின் எண்ணங்களை மிகச்சரியாக புரிந்து கொண்டு, அவர்களின் நியாயமான உரிமைகளை பெறுவதற்காக ஒன்றுபட்டும், தனித்தும் தொடர்ந்து போராடி வெற்றி பெற்று வருகிறது. ஆனால் இதர சங்கங்கள் ஊழியர்களின் உரிமைகளைப் பற்றி கவலைப்படாமல், கணக்கில் எடுக்காமல், அரசும் நிர்வாகமும் சொல்வதை எல்லாம் ஏற்றுக் கொண்டு ஊழிர்களுக்கு துரோகம் இழைப்பதால் அவர்களை ஊழியர்கள் தொடர்ந்து நிராகரித்து வருகின்றனர்.

சங்கங்களுக்கு இடையே ஒற்றுமை :-

முதலாம் சங்க அங்கீகார தேர்தலில் ஒரே சங்கத்திற்கு மட்டுமே அங்கீகாரம் தேவையென கேட்டு, அதன் மூலம் அங்கீகாரம் பெற்ற NFTE சங்கம் மற்ற தொழிற்சங்கங்களை முடக்குவதற்காகவே செயல்பட்டது. ஆனால் தொடர்ச்சியாக நான்குமுறை வெற்றிபெற்று. ஐந்தாவது முறையும் தான் வெற்றி பெறுவது உறுதி என்ற சூழ்நிலையிலும் கூட இராண்டாவது சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று நிர்வாகத்தை வலியுறுத்தி NFTE சங்கத்திற்கும் அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தது BSNL ஊழியர் சங்கம்.

சேவை மேம்பாட்டில்:-

அரசின் கொள்கையால் தொடர்ச்சியாய் வருவாய் இழப்பை BSNL நிறுவனம் சந்தித்து வந்த சூழ்நிலையில் BSNL ஊழியர் சங்கம், அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களை ஒன்றுபடுத்தி FORUM என்ற அமைப்பை உருவாக்கி, சேவையை விஸ்தரிப்பதில் பெரும்பாங்காற்றியது. அதன் காரணமாக BSNL-ன் வருவாய் கடந்த மூன்றாண்டுகளாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக 2013-14ல் சுமார் 24,000 கோடி ரூபாய்களாக இருந்த வருவாய், 2014-15ல் 27,000 கோடி ருபாய்களாக உயர்ந்தது. இந்த ஆண்டு 2015-16ல் வருவாய் 30,000 கோடி ரூபாய்களை தாண்டும் என்று BSNL CMD தெரிவித்துள்ளார். 2013-14ல் 971 கோடி ரூபாய் OPERATIONLOSSல் இருந்த BSNL நிறுவனம், 2014-15ல் 672 கோடி ரூபாய் OPERATIONAL PROFIT ஆக மாறியுள்ளது. BSNL இந்த நிலைக்கு உயர்ந்ததற்கு மிக மிக அடிப்படையான காரணம் BSNL ஊழியர் சங்கத்தின் தலைமையிலான FORUM நடத்திய பிரச்சார இயக்கங்களும், **வாடிக்கையாளர் மகிழ்விப்பு வருடம்** மற்றும் **இன்முகத்துடன் கூடிய சேவை** ஆகியவைகளும் என்றால் அது மிகையாகாது.

ஊழியர் கோரிக்கைகளில்:-

அரசின் கொள்கைகளை எதிர்த்து போராடுவதற்கு தொழிற்சங்கங்களை ஒன்று திரட்டும் மிக மகத்தான பணியினை BSNL ஊழியர் சங்கம் செய்துள்ளது. ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக அனைத்து ஊழியர் சங்கங்களையும் ஒன்று திரட்டி JAC உருவாக்கி 30 அம்ச கோரிக்கைகளை வடித்தெடுத்து 27-11-2014ல் ஒரு நாள் வேலை நிறுத்தம் உட்பட பல போராட்டங்களை நடத்தியதின் காரணமாக பல கோரிக்கைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

அது மட்டுமல்லாமல், ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் ஒன்றுபட்ட போராட்டங்களின் காரணமாக நிறுவனம் நஷ்டத்தில் இயங்கும் போதும் 78.2% பஞ்சப்படி இணைப்பை நாம் அனைவரும் பெற்றோம்.

ஊழியர்களின் ஊதியத்தில்:-

BSNL ஊழியர் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட இந்த 11 ஆண்டுகளில் BSNL ஊழியர்களின் ஊதியம் சுமார் ஐந்து மடங்கு உயர்ந்துள்ளது என்பதை அனைவரும் அறிவோம். இதற்கு காரணம் 01-01-2007 முதல் நடைபெற்ற அற்புதமான ஊதிய மாற்றமும், BSNL ஊழியர் சங்கம் போராடி பெற்ற NEPP என்கிற பதவி உயர்வு திட்டமும் தான்.

அது மட்டுமல்லாமல் பரிவு அடிப்படையிலான பணி நியமனத்தை எளிதாக்கியது. கேடர்களின் பெயர்மாற்றம், பதவி உயர்வு தேர்வுகளில் ஏற்படுத்திய முன்னேற்றம் PLI, BSNL-ல் பணி நியமனம் செய்யப்பட்ட ஊழியர்களின் ஓய்வூதிய பலன்கள், SC/ST ஊழியர்களுக்கு இலாகா தேர்வுகளில் இட ஒதுக்கீடு தொடர்பாக DoP&T உத்தரவுகளை அமுலாக்குவது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் பலவற்றில் வெற்றி பெற்றுள்ளோம். சில பிரச்சனைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் தீர்வு காண்பதோடு கீழ்கண்ட பிரச்சனைகளையும் எதிர்காலத்தில் நாம் வென்றடைவதற்கான முயற்சிகளை BSNL ஊழியர் சங்கம் எடுக்கும் என உறுதி கூறுகிறது.

- **அரசின் BSNL விரோத கொள்கைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுவது.**
- **BSNL-ன் பொருளாதார புத்தாக்கத்தை உறுதி செய்வது.**
- **01-01-2017 முதல் நல்லதொரு ஊதிய மாற்றம்.**
- **01-01-2017 முதல் ஓய்வூதிய மாற்றம்.**
- **சிறப்பான PLI பார்முலா மற்றும் அதன் அடிப்படையில் PLI.**
- **ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என சேவைக்காலத்தில் 5 கட்ட பதவி உயர்வு என்ற புதிய உயர்வு கொள்கை.**
- **மேம்படுத்தப்பட்ட மருத்துவ காப்பீட்டு திட்டம்.**
- **ஊதிய தேக்க நிலைக்கு தீர்வு காண்பது.**
- **அனாமலிக்கு தீர்வு காண்பது.**
- **SC/ST ஊழியர்களுக்கு DoP&T உத்தரவினை முழுமையாக அமுலாக்குவது.**
- **விடுபட்ட கேடர்களுக்கும் பெயர் மாற்றம்.**
- **ஓய்வூதியத்தில் உள்ள 60% கட்டுப்பாட்டை நீக்குவது.**
- **டிலாய்ட்டி கமிட்டி பரிந்துரைகளை தடுத்து நிறுத்துவது.**
- **துணை டவர் நிறுவனம் அமைக்காமல் தடுப்பது.**

எனவே 2016 மே மாதம் 10 ஆம் தேதி நடைபெறவுள்ள

7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலில்

வரிசை எண் - 9-ல் செல்போன் சின்னத்தில்

போட்டியிடும் ஊழியர் சங்கத்திற்கு

வாக்களித்து பெருவாரியான வாக்குகளை அள்ளித்தர வேண்டும் என

தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுடன்

BSNLEU - SNATTA, BSNLMS - தமிழ்மாநிலம்